# பெற்றோருக்கான வாராந்தத் தகவல்கள்!

*கிழமை இல. 38 - 2023*

## கல்வி - 23.09.2023 சனிக்கிழமை - 09:30 -12:30 (10:45 - 11:15)

5 மற்றும் 8ஆம் வகுப்புகளுக்கான வகுப்பறைச் சந்திப்புகள் எதிர்வரும் 23.09.2023 நடைபெறும். விபரம் பின்பு அறியத்தரப்படும்.

*இவ்வாரம் 23.09.2023 13:00 - 18:00 வரை அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூட ஆசிரியர்களுக்கான பட்டறை றொம்மனில் இடம்பெறும்.*

## அனைத்துலக அறிவாடல் போட்டி 2023

இப்போட்டியில் பங்குகொள்ளவிருக்கும் மாணவர்களுக்குப் போட்டிக்கான பயிற்சிகள் இவ்வாரம் வழங்கப்படும். போட்டி நாள் 30.09.2023 ஆக மாற்றப்பட்டுள்ளது.

## கண்காட்சி - 23.09.2023

தியாகி திலீபனின் நினைவுநாளை முன்னிட்டு எதிர்வரும் 23.09.2023 அன்று தமிழர் இளையோர் அமைப்பினரால் கண்காட்சி ஒன்றை நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படவுள்ளது. அன்று 8ஆம் வகுப்பு முதல் 11ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ஒவ்வொரு வகுப்பினருக்கும் கண்காட்சியைப் பார்வையிடுவதற்காக 5-10 நிமிடங்கள் ஒழுங்குசெய்யப்படும். பாடசாலை நடைபெறும் நேரத்திற்குள் பெற்றோர்குழுவின் உதவியுடன் இக்கண்காட்சி இடம்பெறும்.

**கலைவகுப்புகள் - 23.09.2023 சனிக்கிழமை** - வழமைபோல் நடைபெறும்.

மாற்றங்கள் இருப்பின் கலை ஆசிரியர்கள் தங்களுக்கு நேரடியாக அறிவிப்பார்கள்.

**தேநீர்ச்சாலை** - இயங்குநிலையில் இருக்கும்.

***பெற்றோர் மற்றும் பாதுகாவலரின் முக்கிய கவனத்திற்கு!***

தாங்கள் தாங்கள் பயன்படுத்திய உணவுப்பொருட்கள் மற்றும் தேநீர்க் குவளைகள் அனைத்தையும் குப்பையிலிட்டு இடங்களைச் சுத்திகரித்துச் செல்லுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

## நிதி 2023

கடந்த 15.09.2023 வரை உறுதிப்படுத்தப்பட்ட உறுப்பினர்களின் குடும்ப இலக்கங்கள் கொண்ட பட்டியல், வகுப்பு வைபர் குழுமங்களில் இணைக்கப்பட்டுள்ளது.

எமது வளாக இக்கல்வியாண்டில் (2023 - 2024) நடைபெறவுள்ள நிகழ்வுகள்

நவராத்திரி விழா 2023 - 28.10.2023

நத்தார்விழா - 16.12.2023

ஆண்டுக்கூட்டம் பகுதி2 - 11.11.2023

*எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது சந்தேகங்கள் இருப்பின் வளாகப்பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.*

தமிழை வளர்க்கப் பணிபுரிவோம்!

நன்றி!

நிர்வாகம்
அன்னை பூபதி லோறன்ஸ்கூக் வளாகம்